# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2366/33 - 2024 ජනවාරි මස 12 වැනි සිකුරාදා - 2024.01.12

*2366/33 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**2010 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, சீட்டாட்டத் தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டம்**

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய நான், 2010 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, சீட்டாட்டத் தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டத்தின் 3 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அதே சட்டத்தின் 4 ஆம் பிரிவின் மூலம் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, 2022, ஒகத்து 31 ஆந் திகதிய 2295/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட 2022 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, சீட்டாட்டத் தொழில் உரிமமளித்தல் ஒழுங்குவிதியினை பின்வருமாறு திருத்தியமைக்கின்றேன் :-

(1) 5 ஆம் ஒழுங்குவிதியை இரத்துச் செய்து பின்வரும் ஒழுங்குவிதியைப் பிரதியீடு செய்தல் :-

"5. (1) இருபது (20) ஆண்டுகள் அல்லது அதன் ஏதேனும் ஒரு பகுதிக்காக உரிமத்திற்கான அல்லது உரிமத்தினைப் புதுப்பிப்பதற்கான உரிமக் கட்டணம், இந்த ஒழுங்குவிதிகளின் II ஆம் அட்டவணையில் விதித்துரைக்கப்பட்டுள்ளவாறு இருத்தல் வேண்டும் ;

(2) இந்த ஒழுங்குவிதியின் (1) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள காலத்திற்குக் குறைவான காலப்பகுதிக்காக வழங்கப்பட்ட ஏதேனும் உரிமம், அத்தகைய உரிமம் வழங்கப்பட்ட காலம் முடிவடைந்த பின்னர், II ஆம் அட்டவணையில் விதித்துரைக்கப்பட்டுள்ளவாறு உரிமக் கட்டணத்தைச் செலுத்துவதன் மூலம் புதுப்பிக்கப்படுதல் வேண்டும் ;


1A - PG 6625 — 404 (2024/01)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(3) II ஆம் அட்டவணையில் விதித்துரைக்கப்பட்டுள்ள அனைத்து வகை உரிமக் கட்டணங்களும், தற்போதுள்ள கட்டணத்தில் அதிகபட்சமாக 20 சதவீதத்திற்கு உட்பட்டு, 2024, சனவரி 01 ஆந் திகதியன்று முதல் அமைச்சரால் ஐந்தாண்டு இடைவெளிகளில் திருத்தப்படலாம் ;

(4) உரிமத்திற்காக அல்லது உரிமத்தைப் புதுப்பிப்பதற்காக விண்ணப்பதாரர் செலுத்திய குறிப்பிட்ட உரிமக் கட்டணத்தை முன்கூட்டியே செலுத்தியதற்கான ஆதாரம் அமைச்சரிடம் சமர்ப்பிக்கப்பட்டவுடன் மாத்திரமே உரிமம் வழங்கப்படுதல் வேண்டும் ";

(2) இதனகத்தே II ஆம் அட்டவணை என வழங்கப்பட்டுள்ள அட்டவணையை I ஆம் அட்டவணைக்கு உடனடுத்து வருமாறு சேர்த்தல்;

**ரணில் விக்கிரமசிங்க,**
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசியக் கொள்கைகள் அமைச்சர்.

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசியக் கொள்கைகள் அமைச்சு,
கொழும்பு 01,
2024, சனவரி 12.

**அட்டவணை**

"II ஆம் அட்டவணை

| | அளவுகோல்கள் | சீட்டாட்ட உரிமக் கட்டணம் | சீட்டாட்ட உரிமத்தின் புதுப்பித்தல் கட்டணம் |
|---|---|---|---|
| 1 | ஒருங்கிணைந்த அபிவிருத்தியில் முதலீடு செய்யும் விண்ணப்பதாரர்கள் குறைந்தபட்சம் ஐக்கிய அமெரிக்க டொலர் இருநூற்று ஐம்பது மில்லியன் | ரூபா பத்து பில்லியன் | ரூபா பத்து பில்லியன் |
| 2 | ஒருங்கிணைந்த அபிவிருத்தியில் முதலீடு செய்யும் விண்ணப்பதாரர்கள் குறைந்தபட்சம் ஐக்கிய அமெரிக்க டொலர் ஐந்நூறு மில்லியன் | ரூபா ஐந்து பில்லியன் | ரூபா பத்து பில்லியன் |
| 3 | 2023, சனவரி 01 ஆந் திகதிக்கு முன் உரிமம் பெற்ற தற்போதைய இயக்குநர்கள் | ரூபா இரண்டு பில்லியன்<br><br>(முதல் ஐந்து ஆண்டுகளுக்காக - ரூபா ஐந்நூறு மில்லியன் ;<br><br>அடுத்துவரும் ஐந்து ஆண்டுகளுக்காக - ரூபா ஒரு பில்லியன் ஐந்நூறு மில்லியன்) | ரூபா பத்து பில்லியன் |

EOG 01-0144

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.